## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**முன்னிலை : திருமதி.எ..சுவேதா,** B.B.A., L.L.B (Hons)

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

***2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் நாள் செவ்வாய்கிழமை***

***அசல் வழக்கு 274/2012 ல் இடைமனு எண். 284/2025***

*மாலதி* ,...... *மனுதாரர் / 16 ம் பிரதிவாதி*

/எதிர்/

முத்துமாணிக்க நாடார்

டிரஸ்டி அதன்

டிரஸ்டி T.C, முத்துராஜ் ...... எதிர்மனுதாரர்/ வாதி

மனுதாரர் தாக்கல் செய்த இம்மனு என் முன்னர் கடந்த 6.11.2025 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ,சம்மந்தம் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. .ஜி.விஜயலட்சுமி அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும் இதுநாள்வரை என்னுடைய பிரசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,,,,,,,,,

உத்தரவு

01.06.2023 அன்று மனுதாராரர்/16 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை IX விதி 7 மற்றும் உடனிணைந்த பிரிவு - 151 ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனு.

2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 16 ம் பிரதிவாதி என்றும் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், வாதி மனுதாரரின் தாயார் 1ம் பிரதிவாதி பேரிலும் வழக்கு பி அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியம் என்று தீர்மானித்தும் சொத்து சுவாதீனத்திற்கும் மற்ற பரிகாரங்கள் கேட்டும் வழக்கு தாக்கல் செய்து அதில்

மனுதாரர் தாயார் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வந்த நிலையில் மனுதாரரின் தாயாார் (1ம் பிரதிவாதி) 16.12.2021ல் இறந்து விட்டதாகவும் மனுதாரர் தனது தாயாருடன் தான் வசித்து வந்ததாகவும் தன் தாயார் வசித்து வீட்டில் மனுதாரர் தொடர்ந்து வசித்து வருவதாகவும் தன் தாயார் இறந்த பிறகு தனக்கோ அவருடைய வாரிசுதாரர்கள் யாருக்கும் நீதிமன்றத்திலிருந்து எந்த நோட்டிசும் சம்மனும் சார்வாகவில்லை என்றும் வழக்கு நடந்து வரும் விபரம் மற்ற பிரதிவாதிகள் முலம் தற்போதுதான் தெரிய வந்துள்ளது என்றும் இந்த வழக்கில் கூடிவரக்கூடிய கட்சி இருந்து வருவதால் தன் பேரில் கடந்த 1.6.2023 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டி உத்தரவு செய்ய வேண்டியது நியாயமென்றும் எனவே 1.6.2023 அன்று மனுதாரரர்-16ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்-</u>

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய்யானது என்றும் தள்ளுபடிக்குரியது என்றும் இந்த மனுதாரர் இம்மனுவினை மிக்க காலதாமதத்துடன் தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரர் தனது மனுவில் தனது தாயார் 16.12.2021ல் இறந்துவிட்டதாகவும் தாயாருடன் தான் வசித்து வந்ததாக கூறியுள்ளதை மனுதாரரே நிருபிக்க கடமைப்பட்டவர் என்றும் மனுதாரர் தாவா சொத்தில் வசித்து வந்திருந்தால் தொடர்ச்சியாக வழக்கு நடத்திருப்பது தெரிய வந்திருக்கும் என்றும் ஆனால் வழக்கு நடந்து வரும் விபரம் மற்ற பிரதிவாதிகள் முலம் தற்போது தான் தெரிய வந்துள்ளது என்று தனது மனுவில் கூறியுள்ளதை மனுதாரரே நிருபிக்க கடமைப்பட்டவர் என்றும் மனுதாரர் கடந்த 1.6.2023 தேதியில் வழக்கினை ஒருதலைபட்சமாக விட்டுவிட்டு வழக்கில் வேண்டுமென்றே இரண்டு வருடகாலம் கடத்திவிட்டு தற்போது வழக்கு இருதரப்பினருக்கும் விசாரணை செய்யப்படும்போது இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பது வீண் கால விரயம் ஏற்படுத்துவதற்காக மட்டுமே உள்ளது என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது என்றும் எனவே மனுவினை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4, இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதேயாகும்.

6, மனுவினை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரர் தாயார் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வந்த நிலையில் மனுதாரரின் தாயாார் (1ம் பிரதிவாதி) 16.12.2021ல் இறந்து விட்டதாகவும் மனுதாரர் தனது தாயாருடன் தான் வசித்து வந்ததாகவும் தன் தாயார் வசித்து வீட்டில் மனுதாரர் தொடர்ந்து வசித்து வருவதாகவும் தன் தாயார் இறந்த பிறகு தனக்கோ அவருடைய வாரிசுதாரர்கள் யாருக்கும் நீதிமன்றத்திலிருந்து எந்த நோட்டிசும் சம்மனும் சார்வாகவில்லை என்றும் வழக்கு நடந்து வரும் விபரம் மற்ற பிரதிவாதிகள் முலம் தற்போதுதான் தெரிய வந்துள்ளது என்றும் இந்த வழக்கில் கூடிவரக்கூடிய கட்சி இருந்து வருவதால் தன் பேரில் கடந்த 1.6.2023 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டி உத்தரவு செய்ய வேண்டியது நியாயமென்றும் எனவே 1.6.2023 அன்று மனுதாரரர்/16ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கடந்த 1.6.2023 தேதியில் வழக்கினை ஒருதலைபட்சமாக விட்டுவிட்டு வழக்கில் வேண்டுமென்றே இரண்டு வருடகாலம் கடத்திவிட்டு தற்போது வழக்கு இருதரப்பினருக்கும் விசாரணை செய்யப்படும்போது இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கும்படியாக இருந்தாலும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கில் 16ம் பிரதிவாதிக்கு தனது தரப்பை நிருபணம் செய்ய ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதே நீதிக்கு உகந்ததாக இருக்கும். மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணங்களை கூறியிருந்தாலும் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை கருத்திற்கொள்ளும்போது, இம்மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே சரியானதாக இருக்கும்.

இறுதியாக இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக ரு.1000 ஐ 18.11.2025 தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது அழைக்க 18.11.2025,

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-E.Swetha)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்